# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 06 ஞாயிறு 20.06.2021 மலர் - 2, இதழ் - 75


## அப்போது எதிர்ப்பு இப்போது ஆதரவு

சேலம் – சென்னை 8 வழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அப்போதைய அ.தி.மு.க அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. அப்போது, மக்களின் வாழ்வாதாரங்கள், விளைநிலங்கள் பறிபோகின்றன, எட்டு ஆயிரம் ஏக்கர் விளை நிலம் பாதிக்கப்படும்; ஐநூறு ஏக்கர் வனப்பகுதி, எட்டு மலைகள் அழிக்க வேண்டியதிருக்கும். இது எடப்பாடி பழனிசாமியின் ஆதிக்க எண்ணம், அதன் பின்னணி என்ன என கேள்வி கேட்டார் அன்றைய எதிர்க்கட்சி தலைவர் ஸ்டாலின். ஆனால், தற்போது அவர் முதல்வரான உடன் தன் நிலைப்பாட்டை தலைகீழாக மாற்றிவிட்டார். அண்மையில் பிரதமர் மோடியை சந்தித்த ஸ்டாலின் 8வழிச்சாலையின் பெயரை மாற்றி பசுமைவழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை மனுவை வழங்கியுள்ளார். இப்படி மாற்றி பேசுவது அவருக்கு ஒன்றும் புதிது அல்ல, ஏற்கனவே, தான் கையெழுத்திட்ட ஹைட்ரோகார்பன் திட்டத்தை எதிர்த்து தானே போராட்டம் நடத்தியவர்தானே ஸ்டாலின்!




## ராஜகோபால் ஈச்சம்பாடி



அமெரிக்காவில் உள்ள 131 ஆண்டுகள் பழமையானதும், உலகப் புகழ்பெற்றதுமான இலினொய் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைவராக பொறுப்பேற்கும் முதல் இந்தியராகிறார் தமிழகத்தை சேர்ந்த ராஜகோபால் ஈச்சம்பாடி. ராஜகோபால் ஈச்சம்பாடி திருவாரூரில் பிறந்து, சென்னையில் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பையும், அண்ணா பல்கலைக்கழகத்தின் வளாகக் கல்லூரியான கிண்டி பொறியியல் கல்லூரியில் மேல்படிப்பையும் பயின்றவர். வரும் ஆகஸ்ட் 16ல் இவர் இலினொய் தொழில்நுட்ப பல்கலைக்கழக தலைவராக பொறுப்பேற்க உள்ளார். தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் அண்ணா பல்கலைக் கழகம் மற்றும் சென்னை ஐ.ஐ.டி.யுடன் இணைந்து செயல்பட விரும்புவதாக தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோயில் நிலம் மீட்பு



சிவகங்கையில், ஹிந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது ஸ்ரீ கௌரி விநாயகர் கோயில். இக்கோயிலுக்கு சொந்தமாக தஞ்சாவூர் பைபாஸ் சாலையில் உள்ள காஞ்சிராங்கால் கிராமத்தில், ரூ. 50 கோடி மதிப்புள்ள 11 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலத்தை முன்னாள் அமைச்சர் பாஸ்கரனின் பினாமி எனக் கருதப்படும் பாண்டி என்பவர் ஆக்கிரமித்து வணிக வளாகம் கட்டியுள்ளார். இது குறித்த பல புகார்கள் ஹிந்து சமய அறநிலையத்துறைக்கு அனுப்பப்பட்டது. இதனையடுத்து, அதிகாரிகள் அந்த நிலத்தை மீட்டு கட்டடத்திற்கு சீல் வைத்தனர். மேலும், அவ்விடம் ஹிந்து அறநிலையத் துறைக்கு சொந்தமானது என அறிவிப்புப் பலகையையும் வைத்தனர். கோயில் நிலத்தை அபகரித்தவர் முன்னாள் அமைச்சரின் பினாமி என கூறப்படும் நிலையில் அந்த பினாமி, முன்னாள் அமைச்சர், இதற்கு உடந்தையாக இருந்தவர்கள் என அனைவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

---

# ஆர்.எஸ்.எஸ். குறித்து தி.மு.க. அமைச்சர்

தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா சுப்ரமணியன் சமீபத்தில் பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது ஒரு நிருபர், ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தை சார்ந்தவர்கள் கொரோனா நோயாளிகளுக்கான பராமரிப்பு மையம் நடத்தி வருவதை குறித்து அமைச்சரின் கருத்தைக் கேட்டார். அதற்கு அமைச்சர் கூறிய பதில் “முதலமைச்சர், கொரோனா நிவாரண பணிகளை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று நினைக்கிறார். அது இப்பொழுது நடந்துள்ளது” என ஆர்.எஸ்.எஸ் அமைப்பை குறித்து தனது நிலைப்பாட்டினை எடுத்துரைத்துள்ளார். எதிர்க்கட்சியாக இருக்கும் பொழுது ஆர்.எஸ்.எஸ் அமைப்பை குறை கூறிய தி.மு.கவினரே தங்களது தவறை உணர்ந்து , 'அது ஒரு உன்னத மக்கள் இயக்கம், மக்களுக்கு நன்மைகளை செய்து வருகிறது' என ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதையே இது உணர்த்துகிறது.





# தடுப்பூசி திருவிழா நீட்டிப்பு

புதுச்சேரியில் கடந்த 16ம் தேதி முதல் தடுப்பூசி திருவிழா தொடங்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள், திருமண மண்டபங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தி தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இதில், பொதுமக்களும் அதிக ஆர்வத்துடன் கலந்து கொண்டு, தடுப்பூசியை போட்டுக் கொள்கின்றனர். மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. எனவே, கொரோனா தடுப்பூசி திருவிழாவை மேலும் 2 நாட்கள் நீட்டிக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த தடுப்பூசி திருவிழாவில் கலந்து கொண்டு தடுப்பூசி போட்டவர்களில், தினமும் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும் 25 அதிர்ஷ்டசாலிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்கவும், 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி போட்ட முதல் 10 கிராமங்களுக்கு விருது வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக சிறப்பாகப் பணியாற்றிய களப்பணியாளர்களுக்கும் ரொக்கப்பரிசுடன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# அன்புமணி ராமதாஸ் காட்டம்



அன்புமணி ராமதாஸ் தன் அறிக்கையில், 'வேறு எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில் தமிழகத்தில் மட்டும் சிமெண்ட் உள்ளிட்ட கட்டுமானப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அரசு, அவர்களை மயிலிறகால் வருடிக் கொடுப்பதன் மர்மத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. மே 2ம் தேதிக்கு முன்பு வரை ரூ.370 ஆக இருந்த ஒரு மூட்டை சிமெண்ட் விலை, இப்போது ரூ.520. ஒன்றரை அங்குல ஜல்லி ஒரு யூனிட் முன்பு 3,400 இப்போது ரூ.3900. முக்கால் அங்குல ஜல்லி முன்பு 3,600 இப்போது ரூ.4100. எம். சாண்ட் ஒரு யூனிட் முன்பு 5,000 இப்போது 6,000. கட்டுமானக் கம்பி ஒரு டன் முன்பு ரூ. 68,000 இப்போது 75,000. செங்கல் ஒரு லோடு முன்பு ரூ.18,000 இப்போது ரூ. 24,000 என அதிகரித்துள்ளது. டில்லியில் ஒரு மூட்டை சிமெண்ட் ரூ.350, தெலுங்கானா ரூ.360, கர்நாடகம் ரூ.380. ஆனால், தமிழகத்தில் மட்டும் ரூ.520. மற்ற கட்டுமானப் பொருட்களின் விலைகளும் தமிழகத்தைவிட மற்ற மாநிலங்களில் 25 சதவீதம் குறைவாகவே உள்ளன. கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியாளர்களை அழைத்துப் பேசியுள்ளோம். விலை குறைக்காவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்ததாக தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார். ஆனால், இன்று வரை விலைகள் குறைக்கப்படவில்லை. அப்படியானால், உற்பத்தியாளர்கள் தமிழக அரசின் அதிகாரவரம்புக்கு அப்பாற்பட்டவர்களா? அல்லது தமிழக அரசும் உற்பத்தியாளர்களும் உடன்பாடு செய்து கொண்டு நாடகம் நடத்துகிறார்களா? ஏழைகளுக்கு அதிக வேலைவாய்ப்பை வழங்கும் துறைகளில் முக்கியமானது கட்டுமானத் தொழில். விலை உயர்வால் லட்சக்கணக்கானவர்கள் வேலை இழந்துள்ளனர். முதல்வர் ஸ்டாலின் எதுவும் கூறாமல் அமைதியாக இருப்பது ஏன்? கட்டுமானப் பொருட்களின் விலைகளை உடனடியாக குறைக்க அரசு ஆணையிட வேண்டும். மறுக்கும் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்' என வலியுறுத்தியுள்ளார்.



## ஹெலிகாப்பிட்டர் ஒப்பந்த ஊழல்

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஆட்சிக் காலத்தில், கடந்த 2010ல் இத்தாலியை சேர்ந்த அகஸ்டா வெஸ்ட்லேண்ட் நிறுவனத்திடம் இருந்து பாரதத்தில் உள்ள முக்கிய பிரமுகர்களின் பயன்பாட்டுக்காக 12 அதிநவீன ஹெலிகாப்டர்களை வாங்குவதற்கு ரூ. 3,600 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதில் ரூ. 360 கோடி லஞ்சப் பணம் இங்குள்ள இந்திய தலைவர்களுக்கு இடைத்தரகர்கள் மூலம் கைமாறியது தொடர்பான வழக்கை சி.பி.ஐ, அமலாக்கத்துறை விசாரணை செய்து வருகிறது. இதில், இடைத்தரகராக செயல்பட்ட பிரிட்டன் நாட்டை சேர்ந்த தொழிலதிபர் கிறிஸ்டியன் மைக்கேல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவர் மீதான இரண்டு வழக்குகளிலும் ஜாமீன் கோரி டெல்லி சிறப்பு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்திருந்தார். விசாரணைக்குப் பிறகு இரண்டு மனுக்களையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இவ்வழக்கில் விமானப்படை தளபதியாக இருந்த எஸ்.பி. தியாகி, சோனியாவின் மருமகனான ராபர்ட் வத்ராவின் நண்பர் ராஜீவ் சக்சேனா உள்ளிட்ட பலரது பெயர்கள் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



## குஜராத்தில் முதல் மதமாற்ற வழக்கு

குஜராத்தில் வதோதராவைச் சேர்ந்த முஸ்லிமான சமீர் குரேஷி என்பவர், கடந்த 2019ல் சாம் மார்ட்டின் என்ற போலி பெயருடன், சமூக வலைத்தளத்தில் ஒரு கிறிஸ்தவ பெண்ணுடன் பழகியுள்ளார். பின், அந்த நட்பைப் பயன்படுத்தி அந்த பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்ததுடன் தன்னை திருமணம் செய்து கொள்ளாவிட்டால் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிடுவதாக மிரட்டி உள்ளார். திருமணம், முஸ்லிம் முறைப்படி நடைபெற்றபோதுதான், சமீர் குறித்த உண்மைகள் அந்த பெண்ணுக்குத் தெரியவந்தது. பின், அந்த பெண்ணை மதம் மாற கட்டாயப்படுத்தி உள்ளார் சமீர். இதனையடுத்து, அப்பெண் அளித்த புகாரின் பேரில், அம்மாநிலத்தில் சமீபத்தில் அமல் படுத்தப்பட்ட கட்டாய மத மாற்றத் தடுப்பு சட்டத்தின் கீழ், இவ்வழக்கை முதல் வழக்காக பதிவு செய்து, சமீர் குரேஷியை கைது செய்துள்ளனர் அம்மாநில காவல்துறையினர்.

## பா.ஜ.க. தலைவர்கள் கைது





கடப்பா மாவட்டத்தில் புரோட்டாத்தூர் நகரில், ஏராளமான ஹிந்துக்களை கொன்று குவித்த கொடுங்கோலன் ஆட்சியாளர் திப்பு சுல்தானின் சிலையை நிறுவ அப்பகுதி முஸ்லிம்கள் ஒய்.எஸ்.ஆர் காங்கிரசின் சட்டமன்ற உறுப்பினர் ராச்சமல்லு சிவா பிரசாத் ரெட்டிக்கு அழுத்தம் கொடுத்தனர். இதனை ஏற்று அவர் அங்கு திப்புவின் சிலையை நிறுவ ஏற்பாடு செய்தார். இதனை அப்பகுதி பா.ஜ.கவினர், ஹிந்து அமைப்புகள், பொதுமக்கள் எதிர்த்தனர். இதனால், பா.ஜ.க மாநில பொதுச் செயலாளர் விஷ்ணுவர்தன் ரெட்டி மற்றும் பிற பா.ஜ.கத் தலைவர்களை காவல்துறையினர் கைது செய்தனர். ஆந்திர முதல்வரான ஜெகன் மோகன் ரெட்டி, தொடர்ந்து ஹிந்துக்களுக்கு எதிராக செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.


# அஸ்ஸாமில் கரையும் காங்கிரஸ்



அசாமில், காங்கிரஸ் சார்பில் நான்கு முறை சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியத் தலைவர்களில் ஒருவரான ரூப்ஜோதி குர்மி, தனது எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்துள்ளார். வரும் 21ல் அவர் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா முன்னிலையில் பா.ஜ.கவில் இணைகிறார். இதனால், அம்மாநில காங்கிரஸ் எம். எல்.ஏக்கள் எண்ணிக்கை 28 ஆகக் குறைந்தது. இது குறித்து கருத்துத் தெரிவித்த ரூப்ஜோதி குர்மி, ‘சட்டமன்றத் தேர்தலில் பத்ருதீன் அஜ்மலுடனான கூட்டணி காங்கிரசின் ஆபத்தான முடிவு. ராகுல் ஒரு திறமையற்ற அரசியல்வாதி, தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை ராகுல் ஏற்க முடியாது. காங்கிரஸ் தனது இளைய தலைவர்களை தொடர்ந்து புறக்கணிக்கிறது. நாடு முழுவதும் கட்சியின் நிலைமை மோசமடைந்து வருகிறது’ என தெரிவித்தார். விரைவில், அம்மாநில முக்கிய காங்கிரஸ் தலைவர்களான பங்கஜ் போர்போரா, அங்கிதா தத்தா, ஜூரி சர்மா போர்டோலோய் போன்றோரும் காங்கிரசை கைகழுவ உள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ரோஹிங்கியாக்கள் கைது

அண்மையில் உத்தரபிரதேசத்தில் நான்கு ரோஹிங்கியாக்களை அம்மாநில காவல்துறையின் பயங்கரவாத தடுப்புப் படை கைது செய்துள்ளது. இவர்களுடன் சேர்த்து சமீப காலத்தில் அங்கு கைது செய்யப்பட்ட ரோஹிங்கியாக்களின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. மீரட்டில் வசிக்கும் ஹபீஸ் ஷபிக் என்பவன் தலைமையில், முகமது இஸ்மாயில், அஜீசுல் ரஹ்மான், ஷாமியுல்லா, மற்றும் முஃபிசுரேஹ்மான் ஆகிய நான்கு பேர் கொண்ட ரோஹிங்கியா கும்பல், உத்தர பிரதேசத்தில் அதிகமான ரோஹிங்கியாக்களின் குடியேற்றத்திற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். அவர்களுக்காக ரேஷன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை என பல போலி ஆவணங்களை சில அரசியல்வாதிகள், அதிகாரிகளின் துணையுடன் ஏற்பாடு செய்துள்ளனர். அவர்கள் சில ரோஹிங்கியா பெண்களையும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பியுள்ளனர் என்பதும் விசாரனையில் தெரிய வந்துள்ளது.




விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

9313 99006

# விசுவ ஹிந்து பரிஷத்

## வட தமிழகம்

## வங்கம் காக்க உதவிடுவோம்...

### ஹிந்துக்களுக்கு விசுவ ஹிந்து பரிஷத் வேண்டுகோள்

மேற்கு வங்கத்தில் 2021 தேர்தல் முடிவுக்குப் பின் வன்முறையால் பாதிக்கப்பட்ட ஹிந்து சமுதாயத்திற்கு உதவ, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க முன்வருமாறு நாட்டு மக்களுக்கு விசுவ ஹிந்து பரிஷத் அழைப்பு விடுத்துள்ளது.

திரிணமுல் காங்கிரஸ் ஆதரவாளர்கள் மற்றும் கஸ்வா இ ஹிந்த்ஜிகாதிகளின் திட்டமிட்ட வன்முறை தாக்குதலில் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.



- சுமார் பதினோராயிரத்துக்கும் மேற்பட்ட ஹிந்துக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.
- ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.
- 142 பெண்கள் மனிதாபிமானமற்ற முறையில் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானார்கள்.
- 26 பேர் கொடூரமாக கொல்லப்பட்டனர். இவர்களில்பெரும்பாலோர் பட்டியல் சாதியின பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.
- சுமார் 1627 தாக்குதல்கள் நடந்துள்ளன.
- ஹிந்துக்கள் வசிக்கும் ஏழு இடங்களில் அவர்களின் வசிப்பிடங்கள் புல்டோசர்களால் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. அங்கு இரவோடு இரவாக திடீர் மசூதிகள் கட்டப்பட்டுள்ளன.
- இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஹிந்துக்கள் அச்சம் காரணமாக அஸ்ஸாம், ஒடிஸா மற்றும் ஜார்க்கண்டில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்த கொடூரமான வன்முறை 1947 – ல் பாரத பிரிவினையின் போது நிகழ்ந்த வன்முறை மற்றும் படுகொலைகளை நினைவூட்டுவதாக உள்ளது. மேற்கு வங்க ஆளுநர் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியிருக்கிறார். நடந்தேறிய கொடுமைகளை விசாரிக்க தேசிய மனித உரிமைகள் ஆணையம், தேசிய பெண்கள் ஆணையம் போன்ற பல சட்டரீதியான அமைப்புகளும் விசாரணை கோரியுள்ளன.

நமது தேசத்தின் தர்மத்தைப் பாதுகாக்க போராடும் மேற்கு வங்க ஹிந்து சமுதாயத்துடன் அனைவரும் துணை நிற்க வேண்டும். அவர்களுக்கு அனைத்து விதத்திலும் உதவ வேண்டும்

இதன் அங்கமாக

- வீடுகளை இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது
- சூறையாடப்பட்ட வீடுகளைப் புனரமைத்தல்
- மீள் குடியேற்றம்
- ஹிந்துக்கள் மீது பதிவு செய்யப்பட்ட பொய்யான வழக்குகளை எதிர்த்துப் போராடுவது
- பாதிக்கப்பட்டவர்கள் தொழில் தொடங்க உதவுதல்
- வன்முறையில் உயிரிழந்த ஹிந்துக்களை சார்ந்தவர்களுக்கு உதவுவது
- ஹிந்து சமுதாயத்தின் வலிமைமிக்க சக்தியை உருவாக்குதல் போன்ற பல பணிகள் உள்ளன.

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் கொரோனா தொற்றுடன் தங்கள் அன்றாட வாழ்க்கையையும் எதிர்த்து போராடி வருகின்றனர். இவர்களைப் பாதுகாக்கவும் சேவை செய்யவும் நாம் அனைவரும் முன்வர வேண்டும் என்று வி.ஹெச்.பி.யின் மத்திய பொதுச் செயலாளர் மிலிந்த் பராண்டே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது எல்லோரும் கொரோனா என்ற கொடிய நோயை எதிர்த்துப் போராடி வரும் வேளையில் பொருளாதார சிக்கல் இருந்தாலும் மேற்கு வங்கத்தில் நமது ஹிந்து சொந்தங்கள் இதை விட கடுமையாக பாதிக்கப்பட்டு தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து சொல்லொணாத துயரத்தில் உள்ளனர். இவர்களுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம்.

## ஹிந்துக்களுக்கு உதவிட வேண்டிய வங்கி விபரம்:

BANK ACCOUNT DETAILS:

BANK ACCOUNT DETAILS:

| Vishwa Hindu Parishad | | Bharat Kalyan Paristhan | |
|---|---|---|---|
| A/C no | : 04072010017250 | A/C no | : 04072010019960 |
| Bank | : Punjab National Bank | Bank | : Punjab National Bank |
| Branch | : Basantlok, New Delhi | Branch | : Basantlok, New Delhi |
| IFSC Code | : PUNB 0040710 | IFSC Code | : PUNB 0040710 |
| PAN | : AAATV0222D (80G Not available) | PAN | : AAATB 0428P (80G available) |


தொடர்புக்கு :

**சு.வெ.ராமன்**

2/93, ஸ்ரீ பெருமாள் நகர், நன்மங்கலம், சென்னை – 600129. தமிழ்நாடு .

அலைபேசி :7904179287


# வலையில் சிக்கிய மீம்கள்

நாங்க இந்துக்களை எதிர்ப்பதில்லை.. இந்துத்துவாதிகளைதான் எதிர்க்கிறோம்..போராளிகள்

சரியண்ணே.. இந்து, இந்துத்துவாதி எப்படி கண்டுபுடிக்கிறீங்க..

நாங்க இந்து கடவுளை அசிங்கப்படுத்தும் போது அமைதியா இருந்தா அவன் இந்து..

ஏன்டா.. இப்படி செய்றீங்கன்னு கேட்டா.. அவன் இந்துத்துவாதி..




கோயில் நிலங்களில் குடியிருப்போர் யாரும் அந்த இடத்திற்கு உரிமை கோர முடியாது
~ அமைச்சர் சேகர்பாபு
அதெல்லாம் நம்ம சுப்ரீம்கோர்டு எப்பவோ... தீர்பா சொல்லிருச்சி....
குத்தகை தேதி முடிந்த பிறகும் சிவன் கோவில் இடத்தை காலி செய்யாமல் இருக்கும் லயோலா கல்லூரியிடம் இருந்து இடத்தை எப்போ... எப்படி மீட்கப்போறீங்க.?. அத மட்டும் சொல்லுங்க....

# சேவைத்துளிகள்


COVID CARE CENTRE




PRANA SEVA


சேவாபாரதி தமிழ்நாடு ஆத்தூர்



Nuvo
Nuvo Nuvo


சேவாபாரதி
தமிழ்நாடு
சேலம்


Nuvo
Nuvo


சேவாபாரதி தமிழ்நாடு






சீடன் ஒருவன் தன் குருவிடம் ''குருவே, நாம் படைக்கும் நைவேத்யத்தை இறைவன் அருந்துகிறார் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.இறைவன் சாப்பிட்டால் நாம் பிறருக்கு எப்படி பிரசாதமாக வழங்க முடியும்? கடவுள் படையலை சாப்பிடுவாரா''? என்று கேட்டான்.

குரு எதுவும் சொல்லாமல், அவனைப் பார்த்து ''நமது வேதாந்த வகுப்புக்கு நேரமாகி விட்டது. வகுப்பறையை தயார் செய். நானும் வருகிறேன்" என்றார்.

அனைத்தும் பூர்ணத்தில் இருந்தே தோன்றியது என பொருள் கொண்ட "பூர்ணமிதம்" எனும் ஈஷாவாசிய உபநிஷ மந்திரத்தை விளக்கினார் குரு.

சிறிது நேரத்திற்கு பிறகு அந்த சிஷ்யனை அழைத்த குரு, "எனதருமை சீடனே, மந்திரத்தை மனதில் ஏற்றிக் கொண்டாயா? ," என்றார்.

"முழுமையாக உள்வாங்கி கொண்டேன் குருவே".

"எங்கே ஒரு முறை சொல் பார்ப்போம்"

கண்கள் மூடி " பூர்ண மித பூர்ண மிதம் ..." கூறி முடித்தான்.

புன்சிரிப்புடன் குரு தொடர்ந்தார்.. "எங்கே உனது புத்தகத்தை காட்டு"

சீடன், புத்தகத்தை காண்பித்து " குருவே தவறு எனில் மன்னியுங்கள். நான் இதில் இருப்பதை போலவே கூறினேன்..." என்றான்.

"இந்த புத்தகத்தில் படித்துதான் மனதில் உள்வாங்கினாயா? அப்படியெனில், மந்திரம் இதில் இருக்கிறதே? நீ உன் மூளையில் மந்திரத்தை ஏற்றி கொண்டால் புத்தகத்தில் இருக்கக் கூடாதல்லவா?" என்றார் குரு.

சீடன் குழம்பினான்.

குரு தொடர்ந்தார், ''உனது நினைவில் நின்ற மந்திரம் சூட்சம நிலையில் இருக்கிறது.

புத்தகத்தில் இருக்கும் மந்திரம் ஸ்தூல வடிவம். இறைவன் சூட்சம நிலையில் இருப்பவன். இறைவனுக்கு படைக்கப்படுவது ஸ்தூல வடிவில் இருந்தாலும் அவன் சூட்சமமாகவே உட்கொள்கிறான். நீ உள்வாங்கிய பின் புத்தகத்தில் மந்திரம் அளவில் குறைந்துவிட்டதா? அது போலதான் இறைவன் உட்கொண்ட பிரசாதம் அளவில் குறையாமல் நாம் எல்லோரும் உண்கிறோம். ஸ்தூலமாக இருக்கும் நாம் ஸ்தூலமாகவும், சூட்சுமமாக இருக்கும் இறைவன் சூட்சுமமாகவும் நைவேத்யத்தை உட்கொள்கிறோம்."

தனது பக்தியற்ற தர்க்கம் செய்த அறியாமையை குருவிற்கு நைவேத்யம் செய்து முழுமையடைந்தான் சீடன்.

பிரேம், திருவான்மியூர்